Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
STC No. 125 /2023

## Deposition of P.W.4

| | | |
|---|---|---|
| Name | : | பூமணி |
| Husband's Name | : | சந்திரன் |
| Village | : | வடகாடு |
| Religion | : | இந்து |
| Age | : | **58/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 25.10.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். )

**<u>முதல்விசாரணை</u>**

நான் வடகாடு கிராமத்தில் வசித்து வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 வீரமுத்து என்பவரையும் தெரியும். அவர்கள் இருவரும் பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் மதியம் 12.00 மணிப்போல நான் என் வீட்டில் இருந்தபோது எங்கள் வீட்டிற்கு மேற்கே சத்தமாக இருந்தது. நான் அங்கு சென்று பார்த்தபோது எதிரி வீரமுத்துவும், அ.சா.1 வீரமுத்துவும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி வீரமுத்து அ.சா.1 வீரமுத்துவை கையால் அவரது கண்ணத்தில் அடித்து பிடித்து கீழே தள்ளிவிட்டார். அதில் அ.சா.1 வீரமுத்துவிற்கு தலையில் காயம் ஏற்பட்டுவிட்டது. அ.சா.1 வீரமுத்துவை அவரது மனைவி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.1 வீரமுத்துவும், எதிரி வீரமுத்துவும் பங்காளிகள் ஆவார்கள். அ.சா.1 வீரமுத்து எனது பங்காளி ஆவார். பிரச்சனைகுரிய இடத்தில் ஆஜர் எதிரி வீரமுத்துதான் வாழைக்கன்று வளர்த்திருந்தார் என்றால் சரிதான். பிரச்சனைக்குரியதாக சொல்லப்படும் இடம் எதிரி வீரமுத்துவிற்கு உரியது என்றால் சரியல்ல. அ.சா.1 வீரமுத்துவிற்கு உரியது. எதிரி வீரமுத்து வளர்த்திருந்த வாழைக்கன்றுகளை அ.சா.1 வீரமுத்து ஆட்களை கொண்டுவந்து ஜே.சி.பி இயந்திரம் மூலம் வெட்டினார் என்றால் சரிதான். சம்பவத்தில் எதிரி வீரமுத்து காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் சம்பவ இடம்

சென்றபோது எதிரி வீரமுத்து அ.சா.1 வீரமுத்துவை கையால் கண்ணத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 வீரமுத்துவிற்கு தலையில் ஏற்பட்டதாக கூறப்படும் காயம் எதிரியால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி வீரமுத்து வளர்த்திருந்த வாழைக்கன்றுகளை அ.சா.1 வீரமுத்து ஆட்களை கொண்டுவந்து ஜே.சி.பி இயந்திரம் மூலம் அத்துமீறி வெட்டியதை எதிரி வீரமுத்து தடுத்ததால் அ.சா.1 வீரமுத்து எதிரியை அடித்துவிட்டார் என்றும், அதனை நான் மறைத்து அ.சா.1 வீரமுத்துவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவத்தை கேள்விப்படவில்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரி அ.சா.1 வீரமுத்துவை தாக்கவில்லை என்றாலும் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>